பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
23 08-2025 SATURDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 140 கோடி மக்களின் பேராதரவுடன் விண்வெளி உலகில் இந்தியா வியத்தகு சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. விவசாயிகள் பயன்பெறும் வகையில் புவிசார் தகவல் தளத்தை இஸ்ரோ உருவாக்கியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
3. இணையவழி மூலம் விவசாயிகள் பயிர்க்கடன் பெறுவதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
4. தமிழகத்தில் நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் காலை உணவு வழங்கும் திட்டம் வரும் செவ்வாய்க்கிழமை முதல் விரிவுபடுத்தப்படுகிறது.
5. ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் -

<<<<<<>>>>>

நாட்டின் 140 கோடி மக்களின் பேராதரவுடன் விண்வெளி உலகில் இந்தியா வியத்தகு சாதனைகளை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய விண்வெளி தினத்தையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வரும் ஆண்டுகளிலும் விண்வெளித்துறையிலும் இந்தியா தொடர்ந்து சாதனைகளை படைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த துறையில் பல மாற்றங்களை கொண்டுவருவதற்கு மத்திய அரசு பல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளிப்பணிகளில் இளைஞர்களை ஊக்குவிப்பது, தனியார் துறையினர் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கு வாய்ப்பளிப்பது உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் விவசாயிகளுக்கு உதவுவதற்காக புவிசார் தகவல் தளம் ஒன்றை உருவாக்கியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய விண்வெளி தின விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றம், வறட்சி மற்றும் மழை குறித்த துல்லியமான முன்னறிவிப்புகள் விவசாயிகள் தங்களது சாகுபடி பணிகளை திட்டமிடுவதற்கு உதவியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

விவாயிகளுக்கான பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுவரும் இஸ்ரோ நிறுவனத்திற்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

செயற்கைக்கோள் மூலமான தொலையுணர்வு தொழில்நுட்பம் விவசாயம் சார்ந்த புள்ளி விவரங்களையும், பயிர் விளைச்சல் குறித்த தகவல்களை பெறுவதற்கும் உதவிடுவதாக அவர் தெரிவித்தார்.

பயிர்சேதம் குறித்த மதிப்பீடுகளை துல்லியமாக தருவதன்மூலம் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பயிர்களை தாக்கும் பூச்சிகள் குறித்த தகவல்களை பெறுவதற்கு புதிய தொழில்நுட்பத்தை வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கி வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விவசாயிகளுக்கு இணையவழி மூலம் விண்ணப்பித்த ஒரே நாளில் பயிர்க்கடன் பெறுவதற்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வசதி செய்து தரப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள அரசின் செய்திக்குறிப்பில், அண்மையில் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிர்க்கடன் பெற விரும்பும் விவசாயிகள் நேரடியாக இ-சேவை மையத்திற்கு சென்று, கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கணக்கு எண் இவற்றில் ஏதேனும் ஒன்றை கொடுத்து விண்ணப்பத்தை பதிவு செய்யலாம்.

இத்திட்டத்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் வரை பயிர்க்கடன் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கேழ்வரகு உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பு உற்பத்தித்திறனில் இரண்டாம் இடத்தையும், குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை உற்பத்தியில் மூன்றாவது இடத்தையும் தமிழகம் பெற்றுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்டங்களின் பயன்கள் முழுமையாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், அரசு செயல்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் இன்று அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வுகாண அரசு அதிகாரிகள் அவர்களின் இருப்பிடத்திற்கே செல்வதாக குறிப்பிட்டார்.

மாநில அரசு வழங்கிவரும் பல்வேறு நலத்திட்டங்களை அப்போது அவர் பட்டியலிட்டார்.

நெல்லை மாவட்டத்தில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மறு வரையறை செய்யப்பட்ட நிலப்பட்டா உள்ளிட்ட 2 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் திரு கே என் நேரு வழங்கினார்.

<<<<<<>>>>>

காலை உணவு வழங்கும் திட்டம் நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் வரும் செவ்வாய்க்கிழமை முதல் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், இத்திட்டத்தின்மூலம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன்பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கிராமப்புறங்களில் கட்டப்படும் வீடுகளுக்கும் ஒன்றைச்சாளர முறையில் கட்டிட வரைபடத்திற்கான சான்று பெற வேண்டும் என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்காலத்தில் கிராமப்புறங்களும், நகர்ப்புறங்களாக வளர்ச்சிடைந்து வருவதை கருத்தில்கொண்டு கட்டிட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டதாகவும் கூறினார்.

மாநிலத்தில் 500 மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், மனமகிழ் மன்றங்களுக்கான கட்டுப்பாடுகளை கொண்டுவருவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு முத்துசாமி தெரிவித்தார்.

(Voice Byte – முத்துசாமி –34 Sec.

<<<<<<>>>>>

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சூழற்சி காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதியில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும், அவ்வப்போது 65 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை இன்றும், நாளையும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை அறிக்கை கூறுகிறது.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*நாமக்கல் மாவட்டம் தேவநாங்குறிச்சியில் இன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கேட்டறிந்தார்.*

---------------

*காஞ்சிபுரத்தில் நடைபெற்ற உயிர்ம வேளாண் விழிப்புணர்வு கண்காட்சியை மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி இன்று தொடங்கிவைத்தார்.*

-------------

*திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு, 51 லட்சம் ரூபாய் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருந்திய மோட்டார் இருசக்கர வாகனங்களை மாநில அமைச்சர் திரு சாமிநாதன் இன்று வழங்கினார்.*

------------------

*மயிலாடுதுறையில் நடைபெற்ற பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் இன்று தொடங்கிவைத்தார்.*

----------------

*பெரம்பலூர் மாவட்டம் செஞ்சேரி – கோனேரிப்பாளையம் புறவழிச்சாலையில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஆட்சியர் திரு அருண் ராஜ் தொடங்கிவைத்தார்.*

----------------

*மதுரை மாவட்டத்தில் உள்ள ஆவின் ஐஸ்கிரீம் தொழிற்சாலையில் தமிழ்நாடு ஆவின் நிர்வாக இயக்குனர் திரு அண்ணாதுரை மற்றும் ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.*

-----------------

*ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே வாழவந்தாள்புரம் கிராமத்தில் மின்னல் தாக்கி, இரண்டு சிறுமிகள் உயிரிழந்தனர்.*

-------------

*திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் ஆவணி தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.*

*<<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.*

*கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் Elavenil Valarivan – Arjun Babuta இணை தங்கப்பதக்கம் வென்றது.*

*ஜுனியர் கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியாவின் Shambhavi – Pranav இணை தங்கப்பதக்கம் வென்றது.*

-----------------

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 4-6, 6-2 என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் Isaac Becroft-ஐ வென்றார்.*

-------------

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதியாட்டம் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - டைமன்ட் ஹார்பர் அணிகளுக்கு இடையே தற்போது கொல்கத்தாவில் நடைபெற்று வருகிறது.*

*<<<<<<END>>>>>*